தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள்,
சென்னை-06.
ந.க.எண்.016661/எம்2/இ3/2026 நாள்.07.05.2026

பொருள் : பள்ளிக்கல்வி – Anandham Youth Foundation – அரசு / அரசு நிதி உதவிபெறும் பள்ளிகள் – 12-ஆம் வகுப்பில் சிறந்த மதிப்பெண்கள் பெற்ற பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய மாணவர்களின் உயர்கல்விக்கு உதவுதல் – தொடர்பாக.

பார்வை : திரு.எஸ்.செல்வகுமார், நிறுவனர், "ஆனந்தம்" இளைஞர்நல அமைப்பு, சென்னை-24, கடிதம் நாள் 07.05.2026.

-----

பார்வையில் கண்டுள்ள கடிதத்தில் Anandham Youth Foundation மூலம் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 12-ஆம் வகுப்பில் சிறந்த மதிப்பெண்களை பெற்று உயர் கல்வி பயில இயலாத பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய மாணவ / மாணவியர்களுக்கு 100% கல்வி உதவித் தொகையுடன் உயர் கல்வி வழங்கி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கடந்த 14 ஆண்டுகளில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த அரசு பள்ளித் தலைமை ஆசிரியர்களின் பரிந்துரையின் அடிப்படையில் பெறப்பட்ட விண்ணப்பங்களிலிருந்து, பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய மாணவர்களை தேர்ந்தெடுத்து அவர்ளுக்கு 100% கல்வி உதவித் தொகையுடன் உயர்கல்வி வழங்கி வருவதாகவும், தற்போது Anandham Youth Foundation மூலம் பல்வேறு துறைகளில் 1159 மாணவர்கள் உயர் கல்வி பயின்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே 12-ஆம் வகுப்பில் சிறந்த மதிப்பெண்கள் பெற்று மேற்படிப்பை தொடர வசதி இல்லாத மாணவர்களின் விவரங்களை Student Application Link. www.anadham.org என்ற ஆனந்தம் அமைப்பின் இணையதளத்தில் பதிவு செய்திட அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கும் அறிவுரை வழங்கவும் மற்றும் சுற்றறிக்கை அனுப்பிடவும் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மாணவர்களின் நலன்கருதி உயர்கல்வி மேற்படிப்பை தொடர பயன்பெறும்வகையில், பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய மாணவ / மாணவியர்களுக்கு உதவிட அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணைப்பு:பார்வையில் காணும் கடித நகல்

பள்ளிக்கல்வி இயக்குநர்

7/5/26

பெறுநர்

முதன்மைக் கல்வி அலுவலர்,
முதன்மைக் கல்வி அலுவலகம்,
அனைத்து மாவட்டங்கள்.

நகல்

Anandham Youth Foundation,
15/21, 2nd Lane, Pasumathi Street,
Rangarajapuram, Kodambakkam,
Chennai-24.
Cell no: 9841013532
Email: anandhamfoundation@gmail.com

ந.க.எண். 1835/அ5/2026 நாள். 12.05.2026

நகல்: தக்க நடவடிக்கைக்காக அனைத்து அரசு / அரசு நிதி உதவிபெறும் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

பெறுநர்,

தலைமை ஆசிரியர்
அரசு / அரசு நிதி உதவி மேல்நிலைப் பள்ளிகள்

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்-632 009.

12/5/26